Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamalai Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 314	உள்ளூர் - 14.11.2026	சனிக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 314	வெளியூர் - 15.11.2026	ஞாயிற்றுக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

அறுபதில் அதிர்ஷ்டமா? ஜோதிடம் சொல்வதென்ன?

எஸ்பிஐ, இந்தியன் வங்கியில் வேலைவாய்ப்பு!

திருச்சியில் முதல்வரின் பிரம்மாண்ட ரோடு ஷோ?

சபரிமலை பக்தர்களுக்கு இலவச காப்பீடு!

ஜவாஹர்லால் நேருவின் பிறந்தநாள்: பிரதமர் மோடி அஞ்சலி!



புது தில்லி, நவ. 14–

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவாஹர்லால் நேருவின் பிறந்தநாள் இன்று(நவ.14) நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

ஜவாஹர்லால் நேரு 1889–ஆம் ஆண்டு இதே நாளில் அலகாபாத்தில் (குற்போது பிரயாக்ராஜ்) பிறந்தார்.

பிரதமர் மோடி 'எக்ஸ்' பக்க பதிவில், ''முன்னாள் பிரதமர் பண்டிட் ஜவாஹர்லால் நேருவின் பிறந்தநாளில் அவருக்கு தனது அஞ்சலியை செலுத்துகிறேன்'' என்று பதிவிட்டுள்ளார்.



வீட்டுக் கடன் வட்டி உயருமா? டிசம்பரில் முடிவு!

தவணையில் மாற்றமா?



புதுடெல்லி, நவ.14–

வீட்டுக் கடன் செலுத்திவரும் மக்களின் கவனம், டிசம்பரில் நடைபெறவுள்ள ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைக் கூட்டத்தை நோக்கித் திரும்பியுள்ளது. பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியில், ரெப்போ விகிதம் மீண்டும் உயர்த்தப்படுமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியின் அக்டோபர் கூட்டத்தில் ரெப்போ விகிதம் 0.25 சதவீதப் புள்ளி உயர்த்தப்பட்டு, 5.50 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. அடுத்த பணவியல் கொள்கைக் கூட்டம் டிசம்பர் 2 முதல் 4 வரை நடைபெறவுள்ளது. எனினும், அக்கூட்டத்தில் வட்டி உயர்த்தப்படும் என்ற இறுதி முடிவு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி, சர்வதேசச் சூழல் உள்ளிட்ட காரணிகளை மதிப்பிட்டே ரிசர்வ் வங்கி முடிவெடுக்கும். சந்தையில் வெளியாகும் வட்டி உயர்வுக் கணிப்புகளை அதிகாரப்பூர்வ அறிவிப்பாகக் கருதக்கூடாது.

ரெப்போ விகிதம் உயர்ந்து, அதனுடன் இணைக்கப்பட்ட கடன்களின் வட்டியும் அதிகரித்தால், மாறும் வட்டியில் வீட்டுக் கடன் பெற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம். கடன் ஒப்பந்தம் மற்றும் வங்கியின் நடைமுறையைப் பொறுத்து மாதத் தவணை அதிகரிக்கலாம்; அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் நீளலாம். அனைவருக்கும் ஒரே அளவில் உடனடியாக மாற்றம் ஏற்படும் என்பதில்லை.

கடனின் நிலுவைத் தொகை, மீதமுள்ள காலம், வட்டி மறுநிர்ணயத் தேதி ஆகியவை தாக்கத்தை நிர்ணயிக்கும். நிலையான வட்டிக் கடன்களுக்கான விதிமுறைகளும் மாறும் வட்டிக் கடன்களிலிருந்து வேறுபடலாம். எனவே, தங்களுடைய கடன் எந்த வகையைச் சேர்ந்தது என்பதை வாடிக்கையாளர்கள் அறிந்துகொள்வது முக்கியம். வட்டி மாற்றம் தொடர்பாக வங்கியி டமிருந்து வரும் அறிவிப்புகளைப் படிப்பதும், புதிய தவணை அட்டவணை யைப் பெறுவதும் குடும்பச் செலவுகளைத் திட்டமிட உதவும். தவணையை உயர்த்துவதா, காலத்தை நீட்டிப்பதா என்பது குறித்த முடிவுக்கு முன்பு மொத்த வட்டிச் செலவையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். முன்கூட்டியே தொகை செலுத்துதல் அல்லது வேறு வங்கிக்குக் கடனை மாற்றுதல் போன்ற வாய்ப்புகளை ஆராயும்போது, பொருந்தும் கட்டணங்களையும் நிபந்தனைகளையும் கணக்கில் கொள்ள வேண்டும். குறைந்த வட்டி என்ற விளம்பரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்க வேண்டாம்.

டிசம்பர் முடிவு வெளியாகும்வரை வட்டி உயர்வு உறுதியானது என்ற அச்சம் தேவையில்லை. அதே நேரத்தில், கடன் விவரங்களைச் சரிபார்த்து, சாத்தியமான மாற்றங்களுக்கு குடும்ப வரவு செலவுத் திட்டத்தில் இடமளிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

தொகுதி மறுவரையறை: மீண்டும் மசோதா!

புதுடெல்லி, நவ. 14–



தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் தாக்கல் செய்வதற்காக நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரை வருகிற 23–ந்தேதி கூட்ட மத்திய அரசு திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மகளிர் இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்காக மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதம் 17–ந் தேதி சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை மசோதாவை தாக்கல் செய்தது. அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா என்பதால், 3–ல் இரு பங்கு பெரும்பான்மை தேவை. அந்த பெரும்பான்மை கிடைக்காததால் இந்த மசோதா தோல்வி அடைந்தது.

அப்போது நாடாளுமன்றத்தில் 528 எம்.பி.க்கள் வாக்கெடுப்பில் பங்கேற்று இருந்தனர். இதில் பெரும்பான்மைக்கு 352 வாக்குகள் தேவை. ஆனால் 298 வாக்குகளே ஆதரவாக கிடைத்து இருந்தன. இதனால் மசோதா தோல்வி அடைந்தது. ஆனால் தற்போது அரசியல் சூழ்நிலைகள் மாறி உள்ளன. அன்று ஆளுங்கட்சிக்கு எதிராக இருந்த வாக்குகள் பல தற்போது ஆதரவாக திரும்பி உள்ளன. மேலும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக சில கட்சிகள் வெளிநடப்பு செய்யக்கூடும் எனவும் கூறப்படுகிறது. எனவே தொகுதி மறுவரையறை குறித்த மசோதாவை மீண்டும் தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. 15 முதல் 18 வாக்குகள் வித்தியாசத்தில் மசோதா வெற்றி பெறும் என ஆளுங்கட்சி நம்பிக்கை தெரிவித்து இருப்பதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த முறை இதற்காக சிறப்பு கூட்டத்தொடர் கூட்டப்பட்டதைப் போல இந்த முறையும் வருகிற 20–ந்தே திக்கு பிறகு, அனேகமாக 23–ந் தேதி நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் கூட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகத்தான் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், 91 நாட்கள் ஆகியும் இன்னும் அதிகாரப்பூர்வமாக முடித்து வைக்கப்படவில்லை என தெரிகிறது. எதிர்க்கட்சிகள் இதனை குற்றச்சாட்டாக தெரிவித்திருந்தன.

543 உறுப்பினர் பலம் கொண்ட மக்களவையில் தற்போது 3 உறுப்பினர்களின் பதவியிடம் காலியாக உள்ளது. மீதமுள்ள எண்ணிக்கையில் 3–ல் இரு பங்கு பெரும்பான்மைக்காக 361 வாக்குகள் தேவைப்படும். ஆனால் ஆளும் கட்சி தரப்பு இதையும் தாண்டி வாக்குகளை பெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பொதுவாக நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடர்பான முன்னறிவிப்புக்கு குறைந்தபட்சம் 14 நாட்கள் தேவை. ஆனால், ஏற்கனவே நடந்த கூட்டத்தொடரின் நீட்டிப்பாக, இதுபோன்ற சிறப்பு கூட்ட த்தொடரை 3 நாட்கள் முன்னதாக அறிவித்தால் போதுமானது.

எனவே 16 அல்லது 17–ந் தேதி சிறப்புக் கூட்டத்தொடருக்கான தேதி அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களவைத் தொகுதிகள் குறையக்கூடும் என தென் மாநிலங்கள் கவலை தெரிவித்து இருந்த நிலை யில், ''அப்படி குறைய வாய்ப்பில்லை. இருக்கிற தொகுதிகளை விட 50 சதவீதம் அதிகரிக்கவே செய்யும்'' என மத்திய அரசு தரப்பில் உறுதிபட தெரிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.


தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேற்றப்பட்டால், மக்களவை தொகுதிகள் எண்ணிக்கை அதிகபட்சமாக 850 வரை அதிகரிக்கும். அதன் அடிப்படையில், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்த வழி பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2029–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு பெண்கள் இடஒதுக்கீட்டை அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. 1971–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில், மாநிலங்களிடையிலான தொகுதி விகிதாச்சாரம் மாற்றமின்றி நீடிக்க புதிய மசோதாவில் வகை செய்யப்பட்டு இருப்பதாக தெரிகிறது.

இந்த விவகாரத்தில் இன்னும் இறுதித்தன்மை எட்டப்படவில்லை என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கார் வாடகை: விதிகளைத் தளர்த்த வரைவு!

சென்னை, நவ. 14–



கார் வாடகைத் தொழிலில் சிறு முதலீட்டாளர்கள் நுழைவதை எளிதாக்கும் வகையில், மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் புதிய வரைவுதிட்டத்தைவெளியிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'ரென்ட்–ஏ–கேப் திட்டம் 2026' வரைவில், தொழில் தொடங்குவதற்கான குறைந்தபட்ச வாகன எண்ணிக்கையை 50–லிருந்து 5 கார்களாகக் குறைக்க பரிந்துரைக்கப்பட்டு ள்ளதாகக் கூறப்படுகிறது. ஐந்து சுற்றுலா நகரங்களில் கிளைகள் வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் முழுவதும் செல்லுபடியாகும் ஒற்றை மின்னணு உரிமம், உரிமம் வழங்கவும் புதுப்பிக்கவும் 60 நாள் காலக்கெடு ஆகியவை முக்கிய அம்சங்களாக இடம்பெற்றுள்ளன.

வாகனங்களில் ஜிபிஎஸ், முதலுதவிப் பெட்டி மற்றும் உரிய ஆவணங்கள் இருக்க வேண்டும் என்றும், நிறுவனங்கள் இணையதளம் மற்றும் 24 மணி நேர வாடிக்கையாளர் குறைதீர்ப்பு வசதியை ஏற்படுத்த வேண்டும் என்றும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை வரைவு முன்மொழிவுகள் மட்டுமே; இறுதி அறிவிப்பு வெளியான பின்னரே நடைமுறை விதிகள் உறுதியாகும்.

சபரிமலை பக்தர்களுக்கு இலவச காப்பீடு!

சபரிமலை, நவ. 14–



சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ரூ.2 லட்சம் மதிப்பிலான இலவச காப்பீடு வழங்க தேவசம் போர்டு திட்டமிட்டுள்ளது. இதற்காக இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் (எல்.ஐ.சி.) இணைந்து புதிய காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சபரிமலைக்கு ஆண்டுதோறும் மண்டல மற்றும் மகர விளக்கு சீசன்களின்போது நாடு முழுவதும் இருந்து லட்சக்கணக்கான அய்யப்ப பக்தர்கள் வருகை தருகின்றனர். பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு காப்பீட்டு வசதியை இலவசமாக வழங்க தேவசம் போர்டு முடிவு செய்துள்ளது.

இதன்படி, சபரிமலைக்கு செல்லும் ஒவ்வொரு பக்தருக்கும் ரூ.2 லட்சம் மதிப்பிலான காப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை எல்.ஐ.சி. நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த தேவசம் போர்டு திட்டமிட்டுள்ளது.

இந்தக் காப்பீட்டுத் திட்டம் ஆன்லைன் முன்பதிவு மூலம் சபரிமலைக்கு செல்லும் பக்தர்களுக்கு மட்டுமின்றி, ஸ்பாட் புக்கிங் முறையில் முன்பதிவு செய்து செல்லும் பக்தர்களுக்கும் பொருந்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

இதனால் ஆன்லைனில் முன்பதிவு செய்தவர்கள், நேரடி முன்பதிவு மூலம் செல்லும் பக்தர்கள் என இரு தரப்பினரும் இந்தக் காப்பீட்டு வசதியை பெற முடியும்.

இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சமாக, காப்பீட்டுக்காக பக்தர்களிடம் இருந்து எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படாது. காப்பீட்டுக்கான பிரீமியம் தொகையை தேவசம் போர்டே செலுத்த உள்ளது.

இதற்காக மொத்தம் ரூ.1.5 கோடி பிரீமியம் தொகையை தேவசம் போர்டு செலுத்த திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சபரிமலைக்கு வரும் பக்தர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி, சபரிமலைக்கு வரும் அய்யப்ப பக்தர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பண்டித ஜவஹர்லால் நேரு 138–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் ந. ஆனந்த், சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு, செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் குமார்.ரா ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ஹரீஷ், எம்.அருள் பிரகாசம், டாக்டர் டி. அருண்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.அ.அருண் தம்புராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்


மதுரை மணி

சனிக்கிழமை 14.11.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஐப்பசி மாதம் 28-ம் தேதி

மணலைக் காப்போம்; ஆற்றை மீட்போம்!



ஆறு என்பது தண்ணீர் ஓடும் பாதை மட்டுமல்ல; ஒரு சமூகத்தின் உயிர்நாடி. அதன் மணற்படுகை, நிலத்தடி நீருக்கும் விவசாயத்துக்கும் குடிநீர் ஆதாரங்களுக்கும் துணை நிற்கிறது. அந்த மணலை அளவின்றிச் சுரண்டுவது, இன்றைய வளத்தை மட்டுமல்ல, நாளைய தலைமுறையின் வாழ்வாதாரத்தையும் பறிப்பதாகும்.

தமிழ்நாட்டில் ஆற்று மணல் குவாரிகளில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்திருப்பதாக வெளியாகியுள்ள செய்தி கவனத்துக்குரியது. 2021–2024 காலத்தில் விதிகளை மீறி மணல் அள்ளப்பட்டதால் அரசுக்கு ரூ.1,427.34 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர், அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்டோர் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் பாரபட்சமற்ற விசாரணையின் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

வழக்குப் பதிவு செய்யப்பட்டதாலேயே ஒருவர் குற்றவாளியாகிவிடுவதில்லை. குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டியது விசாரணை அமைப்புகளின் பொறுப்பு. அதே நேரத்தில், சம்பந்தப்பட்டவர்களின் பதவியோ அரசியல் செல்வாக்கோ விசாரணைக்குத் தடையாக இருக்கக் கூடாது. அரசியல் பழிவாங்கலுக்கும் இடமின்றி, அதிகாரப் பாதுகாப்புக்கும் வழியின்றி சட்டம் செயல்பட வேண்டும்.

இந்த விவகாரத்தை அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு என்ற கணக்குக்குள் மட்டும் அடக்கிவிட முடியாது. ஆற்றிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மணலுக்கு விலை கணக்கிடலாம். ஆனால், பாதிக்கப்பட்ட நீராதாரங்களுக்கும் ஆற்றின் இயல்புக்கும் மக்களின் வாழ்வாதாரத்துக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்பை யார் கணக்கிடுவது? விசாரணையுடன் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடும் நடைபெற வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக மணல் எடுக்கப்பட்டதா? குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களுக்குச் சாதகமாக விதிமுறைகள் அமைக்கப்பட்டனவா? கண்காணிக்க வேண்டிய அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்தார்களா? இந்தக் கேள்விகளுக்கு ஆவணங்களின் அடிப்படையில் பதில் தேவை. பொறுப்பு சில தனிநபர்களுடன் முடிந்துவிடாமல், முறைகேட்டுக்கு வழிவகுத்த நிர்வாகக் குறைபாடுகளும் கண்டறியப்பட வேண்டும்.

ஒவ்வொரு குவாரிக்கும் வழங்கப்பட்ட அனுமதி, எடுக்க அனுமதிக்கப்பட்ட மணலின் அளவு, உண்மையில் எடுத்துச் செல்லப்பட்ட அளவு, அரசுக்குக் கிடைத்த வருவாய் ஆகிய விவரங்களை மக்கள் எளிதில் அறியும் வகையில் வெளியிட வேண்டும். மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களின் இயக்கத்தைக் கண்காணிப்பதுடன், கண்காணிப்புப் பதிவுகளைச் சுயாதீன ஆய்வுக்கும் உட்படுத்த வேண்டும். தகவல்கள் வெளிப்படையாக இருந்தால்தான் அதிகாரமும் ஒப்பந்தமும் இணைந்து உருவாக்கும் மறைவிடங்கள் குறையும்.

ஆற்றங்கரைக் கிராம மக்களின் குரலுக்கும் நிர்வாகம் செவிசாய்க்க வேண்டும். புகார் அளிப்பவர்களுக்கு பாதுகாப்பும், புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை அறியும் வாய்ப்பும் அவசியம். மக்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டிய பிறகே நடவடிக்கை என்ற நிலை மாற வேண்டும்; சேதம் ஏற்படும் முன்பே தடுக்கும் நிர்வாகமே தேவை.

கட்டுமானத் துறையின் மணல் தேவையையும் அரசு திட்டமிட்டுக் கையாள வேண்டும். தரமான மாற்று மணல் கிடைப்பது, நியாயமான விலை, எளிய கொள்முதல் நடைமுறை ஆகியவை சட்டவிரோதச் சந்தையின் தேவையைக் குறைக்க உதவும். அதோடு, பாதிக்கப்பட்ட ஆற்றுப்பகுதிகளை மீட்பதற்கான அறிவியல் அடிப்படையிலான திட்டங்களும் செயல்படுத்தப்பட வேண்டும்.

இந்த வழக்கு ஒரு நாள் பரபரப்பாகி மறைந்துவிடக் கூடாது. உறுதியான விசாரணை, நீதிமன்றத்தில் நிலைக்கும் ஆதாரங்கள், குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனை, சட்டப்படி இழப்பை மீட்கும் நடவடிக்கை ஆகியவற்றை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதைவிட முக்கியமாக, இதே சுரண்டல் மீண்டும் நிகழாத நிர்வாக மாற்றம் தேவை.

ஆற்றைக் காப்பது அரசின் கடமை; அதைக் கண்காணிப்பது சமூகத்தின் பொறுப்பு. மணல் கொள்ளைக்கு எதிரான நடவடிக்கை தொடரட்டும்—வெளிப்படையாகவும், பாரபட்சமின்றியும், முடிவை நோக்கியும்!

மதுரை மணி,
ஆசிரியர்

அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில்
20, அக்ரஹாரத் தெரு கமுதி- 623 603
இராமநாதபுரம் மாவட்டம் அறிவிப்பு.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான கமுதி 71/3, 71/4,71/5 LF ரோடு,காலி மனையில் வணிகப் பயன்பாட்டு கட்டிடம் கட்டி நடத்தி வரும் N. கருப்பணன் S/o. நீலமேகம் சேர்வை என்பவர் பெயரிலிருந்து திருமதி A.சாந்தி க/பெ.V.ஆதி என்பவர் பெயருக்கு வாடகைதாரர் பெயர் மாற்றம் செய்திட வேண்டி விண்ணப்பம் வரப் பெற்றுள்ளது. மேற்படி பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் ஒரு வார காலத்திற்குள் எழுத்து மூலமாக திருக்கோயில் அலுவலகத்திற்கு தெரிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாள்: 10.11.2026.
இடம்: கமுதி. **நிர்வாகம்**



தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் சென்னை நடுநிலைப் பள்ளியில் குழந்தைகளின் தினத்தை முன்னிட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணாக்கர்களுக்கு கேக் மற்றும் வாழ்த்து மடல் வழங்கி காணொளிக் காட்சிகளைத் தொடர்ந்து வழங்கினார். மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு கேக் மற்றும் வாழ்த்து மடல் மருத்துவம் மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் கே.ஜி. அருண்ராஜ் முன்னிலையில் ஜெய்வாபாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணக்கர்களுக்கு வழங்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.முத்துக்குமரன் இ.ஆ.ப., அவர்கள், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.பாலமுருகன், திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி.சத்தியபாமா, பல்லடம் சட்டமன்ற உறுப்பினர்.க.ராம்குமார். துணை மேயர்.ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ரா.ஆனந்தி, மாநகராட்சி ஆணையாளர் .எம்.பி.அமித் இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி புனிதா அந்தோணியம்மாள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

அந்தமான் - நிகோபார், ராஜஸ்தானில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம்!

புதுதில்லி, நவ. 14–

தென்கிழக்கு வங்கக் கடலில் வெள்ளிக்கிழமை அதிகாலை காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவானது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து, சனிக்கிழமை (நவ.14) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும், நவ.15 –இல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெறும். இதையடுத்து இந்தப் புயல் வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக் கடலில் நவ.16–ஆம் தேதி புயலாக உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப்பகுதியுடன் தொடர்புடைய வளிமண்டல சுழற்சியில் இருந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய பூமத்திய ரேகையையொட்டிய இந்திய பெருங்கடல் வழியாக மாலத்தீவின் வடக்கு பகுதிகள் வரை காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் இன்று பலத்த மழை பெய்யக்கூடும். ராஜஸ்தானில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், அந்தமான் கடல் பகுதி, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் தென்கிழக்கு வங்காள விரிகுடா பகுதிக்கு நாளை வரை மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தில்லி–என்சிஆர் பகுதியில் காற்றின் தரம் 'மிக மோசமான' நிலையில் உள்ளது என மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவுகள் தெரிவித்துள்ளது. அதன்படி, சனிக்கிழமை காலை 7 மணி நிலவரப்படி தில்லியின் காற்றின் தரக் குறியீடு 348 ஆகப் பதிவாகியுள்ளது.

சுகாதாரத் தரவுகள் வெளியீட்டை நிறுத்தியதா தமிழக அரசு?

சென்னை, நவ. 14–

தமிழக அரசு மாதந்தோறும் வெளியிட்டு வரும் சுகாதாரத் தரவுகளில் இருக்கும் உண்மைகள் சித்திரித்து வெளியிடப்படுவதாகக் கூறி, தரவுகள் வெளியீடு நிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாநிலம் முழுவதும் நோய் பரவல் உள்ளிட்ட மிக முக்கியமான, மக்களின் ஆரோக்கியத்துடன் தொடர்புடைய இந்த தரவுகள் வெளியிடுவது நிறுத்தப்பட்டுள்ளதால் கடும் அபாயம் நேரிடும் என துறை வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

தமிழ்நாடு முழுக்க பருவக்கால நோய்கள் பாதிப்பு, நோய்ப் பரவல், பிரசவ கால மரணங்கள், தொற்று நோய்களால் நேரிடும் இறப்புகள் என பல்வேறு தகவல்கள் மாதாந்திர அறிக்கைகள் வாயிலாக சுகாதாரத் துறை மூலம் வெளியிடப்பட்டு வரும்.

இதன் மூலம், தமிழகத்தின் சுகாதார நிலை மக்களைச் சென்றடையவும், சுகாதார அமைப்புகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை எடுக்கவும் பேருதவியாக அமையும்.

ஆனால், இந்த மாதாந்திர அறிக்கைகளை வெளியிடுவதை தமிழக பொது சுகாதார மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் நிறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. இது சுகாதார நிபுணர்கள் இடையே கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

காரணம், நோய் பாதிப்புகள், பரவல்கள் குறித்து மக்களும் சுகாதார அமைப்புகளும் கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த அறிக்கைகள் நிறுத்தப்பட்டால், தற்போது தமிழ்நாட்டில் எந்த விதமான நோய் பரவி வருகிறது, எப்படி பரவல் அதிகரித்து வருகிறது? காய்ச்சல் ஏற்பட்டால் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பது தெரிவிக்கப்படும்.

அது மட்டுமல்லாமல், சுகாதாரத் துறையின் திட்டங்கள், அதன் விளைவுகள், நோய்ப் பரவல் குறித்து ஆய்வு முடிவுகள், நோய்களின் விவரம், பரவல் விவரம் உள்ளடக்கிய மருத்துவ இதழும் வெளியிடப்படும். தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த ஏப்ரல் மாதத்தோடு இந்த இதழ் வெளியிடப்படவில்லை.

இதற்குக் காரணம் என்று தமிழக அரசு கூறியிருப்பது, தமிழக அரசு வெளியிடும் சுகாதாரத் தரவுகளின் உண்மைகள், தவறாக சித்திரிக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுவதாகக் கூறியிருக்கிறது.

ஆனால், அதற்காக சுகாதாரத் துறையின் தரவுகளே வெளியிடப்படாது, நிறுத்தப்படும் என்பது நிச்சயம் மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும் என்று இத்துறை வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

சுகாதாரத் துறையின் தரவுகள் ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிறகு மே மாதம் முதல் தரவுகள் வெளியாகாததால் கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

எந்தெந்த விலையில் மின்சாரக் கொள்முதல்? டெண்டர் திறப்பு பற்றி நிர்மல் குமார் விளக்கம்!

சென்னை, நவ. 14–

கோடைக்கால மின்சாரத் தேவைக்காக ஜனவரி முதல் ஜூன் வரை குறுகிய கால மின்சார கொள்முதலுக்கான டெண்டர் திறக்கப்பட்டுள்ளதாக மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார் சனிக்கிழமை (நவ. 14) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் நிர்மல் குமார் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான கோடைகால மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியம் குறுகிய கால மின்சாரக் கொள்முதலுக்காக வெளியிட்ட டெண்டர் திறக்கப்பட்டுள்ளது.

யூனிட் ஒன்றுக்கு ரூ. 9.50 முதல் ரூ.13 வரை விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு மாதமும் குறைந்த விலையில் உள்ள மின்சாரத்தை மட்டுமே கொள்முதல் செய்ய மின்சார வாரியம் முடிவு செய்துள்ளது.

ஜனவரி – ஒரு யூனிட் ரூ.13, பிப்ரவர் – ஒரு யூனிட் ரூ.9.50, மார்ச் – ஒரு யூனிட் ரூ.10, ஏப்ரல் – ஒரு யூனிட் ரூ.10, மே – ஒரு யூனிட் ரூ.9.95, ஜூன் – ஒரு யூனிட் ரூ.13 என்ற அடிப்படையில் இந்த குறைந்தபட்ச விலையில் மின்சாரம் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு விரைவில் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் மின்சாரம் கொள்முதல் செய்ய விரைவில் டெண்டர் கோரப்படும் என்று அமைச்சர் நிர்மல் குமார் குறிப்பிட்டுள்ளார்.





நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், பாண்டமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சேந்தமங்கலம் வட்டம், வளையப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த.மோகேஷ் தமிழ்செல்வன் , மாவட்ட ஆட்சித்தலைவர் லி.மதுபாலன், தலைமையில், நாமக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ சிறுபான்மையினர் நல ஆணையர் மு.ஆசியா மரியம், முன்னிலையில், குழந்தைகள் தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கேக்குகள் மற்றும் குழந்தைகள் தின வாழ்த்து அட்டைகளை வழங்கினார்.


திண்டுக்கல்லில் காங்கிரஸ் சார்பாக மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சி முகாம்!




பழனி நவம்பர் 14–

திண்டுக்கல்லில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டியின் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சி முகாமில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநிலத் தலைவர் மாணிக்கம் தாகூர் அவர்களுக்கு, பழனி நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பத்மினி முருகானந்தம் அவர்கள், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் திருவுருவப்படத்தை, நினைவுப் பரிசாக வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் அவர்கள் கலந்து கொண்டார். மேலும், மாவட்டத் தலைவர்கள் சாமிநாதன், துரைமணிகண்டன், மாவட்டப் பார்வையாளர் சுரேஷ், மண்டலத் தலைவர்கள் வீரமணி, நேரு, முகமது அலி, ஹக்கீம், மல்லிகா, தங்கமணி, மாவட்டத் துணைத் தலைவர் முத்துவிஜயன், அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்கள் முருகானந்தம், சுந்தர், மாவட்டப் பொதுச்செயலாளர்கள் ராமநாதகிருஷ்ணன் , நஸ்ரூல் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அறுபதில் அதிர்ஷ்டமா? ஜோதிடம் சொல்வதென்ன?



வாழ்க்கை முழுவதும் குடும்பத்திற்காகவும் எதிர்காலத்திற்காகவும் உழைப்பவர்களுக்கு, அறுபது வயதிற்குப் பிறகு அமைதியான வாழ்க்கை அமைய வேண்டும் என்பதே ஆசை. ஜோதிட நம்பிக்கையின்படி, ரிஷபம், சிம்மம், துலாம், மகரம், கும்பம், மீனம் ஆகிய ஆறு ராசியினருக்கு ஓய்வுக்காலத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் கிடைக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

ரிஷபம்: பொறுமையும் விடாமுயற்சியும் கொண்டவர்களாகக் கருதப்படும் இவர்களுக்கு, இளமையில் மேற்கொண்ட உழைப்பின் பலனை அனுபவிக்கும் காலமாக முதுமை அமையலாம். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் நிம்மதியை அதிகரிக்கலாம்.

சிம்மம்: தன்னம்பிக்கைக்கும் தலைமைப் பண்புக்கும் பெயர்பெற்ற இவர்களுக்கு, அனுபவத்தால் கிடைக்கும் மரியாதை மகிழ்ச்சியளிக்கலாம். குடும்பத்தினருக்கு வழிகாட்டுவதிலும் சமூக உறவுகளைப் பேணுவதிலும் திருப்தி ஏற்படலாம்.

துலாம்: உறவுகளையும் சமநிலையையும் விரும்பும் இவர்களுக்கு, அன்பான குடும்பச் சூழல் பெரிய பலமாக அமையலாம். ஆடம்பரத்தைவிட எளிய வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் காணும் மனப்பக்குவம் ஓய்வுக்காலத்தை இனிமையாக்கலாம்.

மகரம்: திட்டமிடல், ஒழுக்கம், கடின உழைப்பு ஆகிய பண்புகளுடன் தொடர்புபடுத்தப்படும் இவர்களுக்கு, நீண்டகாலப் பொறுப்புகள் குறைவது ஆறுதலாக இருக்கலாம். குடும்ப நிகழ்வுகளும் உறவினர்களுடனான சந்திப்புகளும் உற்சாகத்தைத் தரலாம்.

கும்பம்: புதிய சிந்தனைகளை விரும்பும் இவர்களுக்கு, ஓய்வுக்காலம் தனிப்பட்ட விருப்பங்களை நிறைவேற்றும் வாய்ப்பாக அமையலாம். வாசிப்பு, சமூகப்பணி, புதிய திறன்களைக் கற்றல் போன்ற செயல்கள் மனநிறைவை அளிக்கலாம்.

மீனம்: அன்பும் கற்பனை வளமும் கொண்டவர்களாகக் கூறப்படும் இவர்களுக்கு, குடும்பப் பாசமும் ஆன்மிக ஈடுபாடும் ஆறுதலாக அமையலாம். கலை, இசை போன்ற விருப்பங்களில் ஈடுபடுவது மகிழ்ச்சியை வளர்க்கலாம்.

இந்த ஆறு ராசிகளுக்கும் கூறப்படும் பலன்களில் பொதுவாக இடம்பெறுவது பணத்தைவிட மனநிறைவுக்குக் கிடைக்கும் முக்கியத்துவமே. பிள்ளைகள், பேரக்குழந்தைகள், நண்பர்கள் ஆகியோருடன் நேரம் செலவிடுவதும், நீண்டநாள் ஆசைகளை இயன்ற அளவில் நிறைவேற்றுவதும் வாழ்வை வளப்படுத்தலாம். கடந்தகால ஏமாற்றங்களைத் தொடர்ந்து நினைப்பதற்குப் பதிலாக, நிகழ்காலத்தின் சிறிய சந்தோஷங்களை ரசிக்கும் அணுகுமுறை முதுமையை இனிமையாக்க உதவும்.

ஓய்வு என்பது செயலற்ற காலமாக இருக்க வேண்டியதில்லை. அனுபவங்களைப் பகிர்வது, தோட்டம் அமைப்பது, சுற்றத்தாருடன் பழகுவது போன்ற எளிய செயல்களும் அன்றாட வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கலாம்.

எந்த ராசியைச் சேர்ந்தவராக இருந்தாலும், உடல்நல அக்கறை, திட்டமிட்ட சேமிப்பு, அன்பான உறவுகள் ஆகியவையே மகிழ்ச்சியான முதுமைக்கான நடைமுறை ஆதாரங்கள். தனிமையைத் தவிர்த்து, விருப்பமான செயல்களுக்கு நேரம் ஒதுக்குவதும் முக்கியம்.

இவை ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையிலான பொதுப் பார்வைகள் மட்டுமே; அறிவியல் ஆதாரமுள்ள கணிப்புகளோ உறுதியான வாழ்க்கைப் பலன்களோ அல்ல

பழனி முருகன் மலைக் கோவிலில் கந்த சஷ்டி திருவிழா: சூரசம்காரம்!



பழனி நவம்பர் 14–

பழனி முருகன் மலைக்கோவிலில் நாளை கந்தசஷ்டி திருவிழாவை நான்கு சூரர்கள் சம்ஹாரம் நடைபெறுகிறது. பழனி முருகன் கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் கந்த சஷ்டி திருவிழா சிறப்பானதாகும் இத்திருவிழா கடந்த 10ஆம் தேதி மலைக்கோவிலில் காப்பு கட்டுடன் தொடங்கியது. அது முதல் பக்தர்கள் தங்களின் கைகளில் மஞ்சள் நிறக் கயிற்றை காப்பாக கட்டிக்கொண்டு கடும் விரதம் இருந்து வந்தனர். இதில் முக்கிய நாள் நிகழ்ச்சியாக நாளை சூர சம்ஹாரம் நடைபெறுகிறது. நாளை நவம்பர் 15ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு சாய ரட்சை பூஜையும் மதியம் 3 மணிக்கு பராசக்தி வேல் வாங்குதல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. அதன் பின்பு கோவில் நடை சாத்தப்படுகிறது. அதனால் நாளை காலை 11:30 மணிக்கு மலைக்கோவிலில் அனைத்து கட்டண சீட்டுகளும் நிறுத்தப்படும். மேலும் நாளை காலை 11 மணி வரை மட்டுமே பக்தர்கள் மலைக்கோவிலில் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

அதன் பின்பு மாலை 5 மணி அளவில் முருக பெருமான் வள்ளி தெய்வானையுடன் அடிவாரம் திருக்கல்யாணம் மண்டபத்தில் எழுந்தருள்ளல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதன் பின்பு முருகப்பெருமான் பராசக்தி வேலுடன் பழனி திருஆவினன்குடி கோவிலுக்கு சென்று பூஜை செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்பு பராசக்தி வேலுடன் புறப்பட்டு முருகப்பெருமான், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை கிரி வீதிகளில் தாரக சூரன், பானுகோபன் சூரன், சிங்கமுக சூரன், சூரபத்மன் சூரன், ஆகிய நான்கு சூரர்களையும் வேல் கொண்டு வதம் செய்கிறார். பின்பு இரவு 9:00 மணிக்கு சூரர்களை வதம் செய்த முருக பெருமானுக்கு ஆரியர் மண்டபத்தில் வெற்றி விழா நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை இணை ஆணையர் ஆர் ஹரிஹரன், துணை ஆணையர் வெங்கடேஷ், அறங்காவலர் குழு தலைவர் கே எம் சுப்பிரமணியன், அறங்காவலர்கள் சேலம் தனசேகர், சு. பாலசுப்பிரமணி, ஜி ஆர் பாலசுப்பிரமணியம், அன்னபூரணி ஆகியோர் செய்து வருகிறார்கள்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



சத்தமான குறட்டை: அலட்சியம் வேண்டாம்!



தொடர்ந்து சத்தமாகக் குறட்டை விடுவதுடன், உறக்கத்தில் மூச்சு நின்று நின்று வருதல், மூச்சுத் திணறி விழித்தல், பகலில் அதிகத் தூக்கம் போன்றவை இருந்தால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம். இவை உறக்கத்தில் சுவாசப்பாதை அடைபடும் 'ஆப்ஸ்ட்ரக்டிவ் ஸ்லீப் அப்னியா' பாதிப்பின் அறிகுறிகளாக இருக்கலாம்.

குறட்டை விடுபவர்கள் அனைவருக்கும் இந்தப் பாதிப்பு இருப்பதில்லை. குறட்டையின் சத்தத்தை மட்டும் வைத்து நோயை உறுதிப்படுத்தவும் முடியாது. அறிகுறிகளின் அடிப்படையில் மருத்துவர் உறக்கப் பரிசோதனையைப் பரிந்துரைக்கலாம்.

உடல் எடையைச் சீராகப் பராமரித்தல், மதுவைக் கட்டுப்படுத்துதல், புகைப்பழக்கத்தைக் கைவிடுதல், பக்கவாட்டில் உறங்குதல் போன்றவை உதவலாம். பாதிப்பின் தன்மைக்கேற்ப சி.பி.ஏ.பி. கருவி அல்லது பிற சிகிச்சைகள் வழங்கப்படலாம்.

குறட்டையுடன் மூச்சுத் தடையும் பகல்நேரத் தூக்கமும் இருந்தால், தாமதிக்காமல் மருத்துவரை அணுகுங்கள்.

அரிசி, பருப்பு, சர்க்கரை இருப்புக்கு கட்டுப்பாடு!



சென்னை, நவ. 14–

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள், நியாயமான விலையில் கிடைக்க இருப்பு வரம்பை நிர்ணயித்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாடு அரசு, 1955–ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் பிரிவு 3–இன் கீழ், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, அரிசி / நெல் மற்றும் சர்க்கரை ஆகியவற்றுக்கு இருப்பு வரம்புகளை நிர்ணயித்தும், இருப்பு விவரங்களை தொடர்ந்து அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியும் கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இந்த ஆணைகள், இந்திய அரசின் முன் இசைவுடன், அரசிதழ் எண்கள். 486, 487 நாள்.13.11.2026–இல் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய அரசிதழின் படி சர்க்கரைக்கு மறு பதிப்பு அரசிதழ் எண் 490, நாள் 13.11.2026 –இல் வெளியிடப்படுகிறது.

மாநிலத்தில் துவரம் பருப்பு, அரிசி மற்றும் சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டில் வைக்கவும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி மற்றும் பிற பொருட்களின் விநியோகம் தடையின்றித் தொடரவும் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்கிறது.

இந்த வரம்புகள் அரசிதழில் வெளியிடப்பட்ட 13.11.2026–ஆம் நாள் முதல் மூன்று மாதங்கள் வரை துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பிற்கும், 31.01.2027 வரை அரிசி மற்றும் நெல்லுக்கும் நடைமுறையில் இருக்கும். எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ கீழ்க்கண்ட வரம்புகளுக்கு மேல் இருப்பு வைத்திருக்கக் கூடாது.

மேலும், இந்திய அரசு 2026 நவம்பர் 6ம் தேதி அன்று பிறப்பித்த ஆணையின்படி, ஒவ்வொரு வணிகரும், மொத்த வணிகரும், சில்லறை வணிகரும், பெரிய தொடர் சில்லறை விற்பனை நிறுவனமும், ஆலை உரிமையாளரும், பதனிடுவோரும் அரிசி / நெல் இருப்பை, உணவு இருப்பு இணையதளத்தில் (foodstock.dfpd.gov.in) அறிவித்து, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதனைப் புதுப்பிக்க வேண்டும்.

அதேபோன்று, துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு இருப்பையும், பருப்பு வகைகளுக்கென நிர்ணயிக்கப்பட்ட இணையதளத்தில் (fcainfoweb.nic.in) அதே முறையில் சர்க்கரை இருப்பையும் அறிவிக்க வேண்டும். ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் வரம்புக்கு மேல் வைத்திருக்கும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் அரிசி / நெல் இருப்பை, 16.11.2026 நாட்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் கொண்டு வர வேண்டும்.

சர்க்கரையைப் பொறுத்தவரை, எந்தவொரு வணிகரும் சர்க்கரை இருப்பைப் பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்கு மேல் அந்தச் சர்க்கரை இருப்பைத் தன்னிடம் வைத்திருக்கக் கூடாது.

இதன் மூலம் பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், இவற்றை கண்காணிக்கவும், மாவட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் வட்ட வழங்கல் அலுவலர் மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாணைகள், விவசாயிகள் தங்களது சொந்த வேளாண் விளைபொருட்களை இருப்பு வைத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. அனைத்து நுகர்வோருக்கும் அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலையில் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வதில், வணிகர்கள், ஆலை உரிமையாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் முழு ஒத்துழைப்பை அரசுக்கு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புகார்களையும் தகவல்களையும் கட்டணமில்லா உதவி எண் 1967 / 1800 425 5901–க்கோ அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரிடமோ தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய்க்கு, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடிதம்!



சென்னை, நவ. 14–

காவிரி விவகாரத்தில், இனியும் அமைதி காக்கக் கூடாது என முதலமைச்சர் விஜய்க்கு, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.மேகதாது அணை கட்டுவதை யாராலும் தடுக்க முடியாது எனப் பிரதமர் முன்னிலையில் பேசியுள்ளார் கர்நாடக முதலமைச்சர் சிவக்குமார். மேகதாது விவகாரத்தில் தமிழ்நாடு அரசு உடனடியாக அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று திமுக தலைவர் வலியுறுத்தியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கேக் மற்றும் வாழ்த்து அட்டைகள் வழங்கியைத் தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.பிரசன்னா ராமசாமி ஜெதாபி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு கேக் மற்றும் வாழ்த்து அட்டைகளை வழங்கினார். உடன் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சத்யா உள்ளார்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவில் நிர்வாகம் - பக்தர்களின் அறியாமையை ராஜதந்திரமாக உபயோகித்து வசூல் செய்யும் ராஜா-

ஆலயம் காப்போம் கண்டனம்!




மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவில் நிர்வாகம் பக்தர்களின் அறியாமையை உணர்ந்து கட்டண வரிசையை இரண்டாக்கி ஒரு வரிசை 10 செகண்ட் தரிசனம் மற்றொரு கட்டண வரிசை 90 செகண்ட் தரிசனம் என்று பாகுபாடு காட்டி சில நாட்களாக செயல்படுத்தி வருகிறது இதனால் கட்டண வரிசை கூட்டம் வேகமாக நகர்த்தப்பட்டு கூடுதல் பக்தர்கள் கட்டண வரிசைக்குள் இழுக்கப் படுகிறார்கள் இந்த சிறந்த வியாபார உக்தி க்கு நம்முடைய பாராட்டுகள் வினவியதற்கு மாத வசூல் இலக்கு என்ற நோக்கம் தெரிகிறது.

பக்தர்கள் சிரமம் மட்டும் இலக்காக இருந்தால் இலவச வரிசையை அல்லவா இரண்டாக்கி வேகமாக நகர்த்தி கூட்டத்தை குறைக்க வேண்டும் இலவச வரிசையில் வரும் ஏழை பக்தர்களை கால் கடுக்க அதிக நேரம் நிற்பதை பற்றி கொஞ்சம் கூட அக்கரை இல்லாத மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவில் நிர்வாகத்தை இனி வசூல் ராஜா அழைப்பதில் தவறில்லை.

பக்தர்கள் விரைவு தரிசனத்திற்காக அழைத்து செல்லும் தனி நபரிடம் ஏமாற வேண்டாம் என்ற கோவில் நிர்வாகத்தின் அறிவிப்பு போல் நாமும் கட்டணம் கொடுத்து பக்தர்கள் ஏமாற வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் கும்பாபிஷேகம் அனுமதி சீட்டுக்கு குரல் கொடுத்த மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் இந்த வசூல் வேட்டைக்கு குரல் கொடுக்க வேண்டும் என்று ஆலயம் காப்போம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது கூடிய விரைவில் பக்தர்கள் விழித்து கொள்ள வேண்டும் என்று ஆலயம் காப்போம் எல்லா வல்ல ஸ்ரீ மீனாட்சி மற்றும் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் களிடம் பிரார்த்தனை செய்கிறோம்

நன்றி, வணக்கம்.



திருவண்ணாமலை தீப விழா: தரிசனத்துக்கு பக்தர்கள் வரம்பு!

திருவண்ணாமலை, நவ. 14–



திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத் திருவிழாவில், பரணி தீப தரிசனத்துக்கு 5,000 பேரும், மகா தீப தரிசனத்துக்கு 8,000 பேரும் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என நியூஸ்நேஷன் செய்தி தெரிவிக்கிறது. கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்த வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. கோவில் சுற்றுப்பகுதி மற்றும் கிரிவலப் பாதையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் காவல்துறையின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்

நவ.16-ல் உருவாகிறது 'அக்வான்' புயல்: ஆந்திரத்தை நோக்கி நகரும்?

சென்னை, நவ. 14–



வங்கக் கடலில் நவ.16–ஆம் தேதி 'அக்வான்' புயல் உருவாக வாய்ப்புள்ளதாகவும், இதுவும் முந்தைய புயல்கள் போல ஆந்திரத்தை நோக்கி நகர வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வுமைய தென்மண்டல தலைவர் வி.ஆர்.துரை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த அக்.15–ஆம் தேதி தொடங்கியது. இதையடுத்து, கடந்த காலங்களில் இல்லாதது போன்ற தொடர்ந்து அடுத்தடுத்து புயல்கள் உருவான வண்ணம் உள்ளன.

தென்கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு வங்கக் கடலில் 'அர்னாப்' புயல் உருவானது. இது தீவிர புயலாக வலுப்பெற்று, அக்.28–ஆம் தேதி அதிகாலையில் ஆந்திர மாநிலம் காக்கிநாடா– புதுவை யூனியன் பிரதேசத்துக்குட்பட்ட ஏனாம் பகுதியில் கரையைக் கடந்தது. இந்தப் புயல் கரையைக் கடந்தபோது மணிக்கு 125 முதல் 135 கி.மீ. வேகத்திலும், அவ்வப்போது 150 கி.மீ. வேகம் வரையிலும் காற்று வீசியது. இதையடுத்து, அக்.31–ஆம் தேதி உருவான 'முரசு' புயல் நவ.3–ஆம் தேதி ஆந்திர மாநிலத்தின் தெற்கு கடலோரப் பகுதியான ஓங்கோலுக்கு அருகே நெல்லூர் – நரசாபுரம் இடையே கரையைக் கடந்தது.

3 சதவீத மழை குறைவு: இப்படி உருவாகும் புயல்கள் தொடர்ந்து ஆந்திரத்தில் கரையைக் கடப்பதால், தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் எதிர்பார்த்த அளவுக்கு மழை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில், வடகிழக்குப் பருவமழை அக்.1 முதல் நவ.13–ஆம் தேதி வரை இயல்பாக 267 மி.மீ. மழை பதிவாக வேண்டும். ஆனால், நிகழாண்டு 259 மி.மீ. அதாவது 3 சதவீதம் குறைவாக மழை பதிவானது.

இதில், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களைத் தவிர்த்து, வட தமிழகம், டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் இயல்பைவிட குறைவாகவே மழை பதிவானது. இதனால், ஏரிகள், அணைகளில் நீர் இருப்பு மிகவும் குறைவாக உள்ளது.

'அக்வான்' புயல்: இந்நிலையில், வங்கக் கடலில் வரும் நவ.16–ஆம் தேதி மீண்டும் ஒரு புயல் உருவாக வாய்ப்புள்ளதாகவும், ஆனால் இதுவும் ஆந்திர மாநிலம் நோக்கியே நகரக் கூடும் என வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் வி.ஆர்.துரை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது: தென்கிழக்கு வங்கக் கடலில் வெள்ளிக்கிழமை அதிகாலை காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவானது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து, சனிக்கிழமை (நவ.14) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும், நவ.15 –இல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெறும். இதையடுத்து இந்தப் புயல் வடக்கு– வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக் கடலில் நவ.16–ஆம் தேதி புயலாக உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இது, புயலாக மாறும் நிலையில் இதற்கு ஈரான் பரிந்துரைத்த 'அக்வான்' என்ற பெயர் சூட்டப்படும்.

நிகழாண்டு 'சூப்பர் எல்நினோ' தாக்கத்தில் கடல் இயல்பைவிட அதிகமாக வெப்பமடையும் நிலையில் இதுபோன்று அடிக்கடி புயல் உருவாக வாய்ப்புள்ளது. வரும் காலங்களில் இதுபோன்ற புயல்கள் தொடர்ந்து உருவாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அதேபோல் வழக்கமாக தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகும் புயல்கள் தமிழகம் நோக்கியும், தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகும் புயல்கள் ஆந்திர மாநிலம் நோக்கியும் நகரும். அந்த வகையில், இந்தப் புயலும் தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ளதால், இதுவும் ஆந்திரம் நோக்கியே நகர அதிக வாய்ப்புள்ளது. வரும் காலங்களில் புயலின் நகர்வைப் பொருத்து இது கரையைக் கடக்கும் இடம் உறுதி செய்யப்படுவதுடன், தமிழகத்தில் மழைப் பொழிவு இருக்கும் என்றார் அவர்.

மழை எச்சரிக்கை: இதற்கிடையே சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் சனிக்கிழமை (நவ.14) முதல் நவ.16–ஆம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. ஏனைய தமிழகத்தில் வட வானிலையே நிலவும்.

சென்னை மற்றும் புகர் பகுதிகளில் சனிக்கிழமை (நவ.14) லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

இதற்கிடையே, நவ.14 முதல் நவ.17–ஆம் தேதி அந்தமான் கடல், வங்கக் கடலில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இதில், நவ.17–இல் வட தமிழக கடலோர பகுதிகளில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். இதனால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையை எதிர்நோக்கும் சென்னை ஏரிகள்

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை ஆகிய 5 ஏரிகளின் மொத்த கொள்ளளவு 11,757 மில்லியன் கன அடியாகும். வடகிழக்குப் பருவமழை தொடங்கி ஒரு மாதம் ஆகியும் ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யவில்லை.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி பூண்டி ஏரியில் 584 மில்லியன் கன அடி (18.07 %) நீர் உள்ளது. அதேபோல், செம்பரம்பாக்கம் ஏரி – 1,374 (37.70 %), புழல் ஏரி – 2,388 (72.36 %), சோழவரம் ஏரி – 169 (15.63%), கண்ணன் கோட்டை ஏரி – 253 மில்லியன் கன அடியும் (50.60%) நீர் இருப்பு உள்ளது. அதன்படி, மொத்தம் 5 ஏரிகளில் 4,768 மில்லியன் கன அடி, அதாவது 40.55 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, 5,145 மில்லியன் கன அடி குறைவாகும். எனவே, வரும் காலங்களில் தமிழகத்தில் போதிய மழை பெய்தாலே இந்த ஏரிகள் நிரம்பும் சூழில் உருவாகியுள்ளது.

அகவான் புயல் பெயர்க் காரணம்

இந்திய பெருங்கடலின் வடக்குப் பகுதியில், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடலில் உருவாகும் புயல்களுக்கு இந்தியா, வங்கதேசம், ஈரான், பாகிஸ்தான், இலங்கை உள்பட 13 நாடுகள் இணைந்து உருவாக்கிய பெயர்ப் பட்டியலிருந்து பெயர் சூட்டப்படும். ஒவ்வொரு நாடும் பரிந்துரைத்த பெயர்கள் வரிசைப்படி பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் வங்கக் கடலில் ஏற்கெனவே உருவான இரு புயல்களுக்கு வங்கதேசம் சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட 'அர்னாப்', இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட 'முரசு' ஆகிய பெயர்கள் சூட்டப்பட்டன. அதையடுத்து 3–ஆவதாக உருவாகவுள்ள புயலுக்கு ஈரான் பரிந்துரைத்த 'அக்வான்' என்ற பெயர் சூட்டப்படும். இதற்கு, பாரசீக மொழியில் 'அசுரன்' அல்லது 'தீய சக்தி' எனப் பொருளாகும்.

வேலை வாய்ப்பு

வங்கி வேலைவாய்ப்பு 2026

இந்தியன் வங்கி
1,500
பயிற்சியாளர் இடங்கள்

பாரத ஸ்டேட் வங்கி (SBI)
17
உதவி மேலாளர் – தீயணைப்பு

பாரத ஸ்டேட் வங்கி (SBI)
60
மேலாளர் / துணை மேலாளர் – பாதுகாப்பு

மொத்தம்: 1,577

வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில்

1. இந்தியன் வங்கி 1,500 பயிற்சியாளர் இடங்கள்!

விவரம்	தகவல்
நிறுவனம்	இந்தியன் வங்கி
பணிப்பிரிவு	மத்திய அரசு வங்கி
பயிற்சி	தொழிற்பழகுநர் (Apprentice)
காலியிடங்கள்	1,500
பயிற்சிக் காலம்	ஓராண்டு
பணியிடம்	இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்	05.11.2026
கடைசி தேதி	25.11.2026
விண்ணப்ப முறை	ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்	indianbank.bank.in

2. எஸ்பிஐ 17 உதவி மேலாளர் பணியிடங்கள்!

விவரம்	தகவல்
நிறுவனம்	பாரத ஸ்டேட் வங்கி (SBI)
அறிவிப்பு எண்	CRPD/SCO/2026–27/29
பணிப்பிரிவு	மத்திய அரசு வங்கி
பதவி	உதவி மேலாளர் தீயணைப்புப் பொறியாளர்
காலியிடங்கள்	17
பணி வகை	நிரந்தரப் பணி
பணியிடம்	இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்	04.11.2026
கடைசி தேதி	25.11.2026
விண்ணப்ப முறை	ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்	sbi.bank.in

3. எஸ்பிஐ 60 பாதுகாப்பு மேலாளர் பணியிடங்கள்!

விவரம்	தகவல்
நிறுவனம்	பாரத ஸ்டேட் வங்கி (SBI)
அறிவிப்பு எண்	CRPD/SCO/2026–27/28
பணிப்பிரிவு	மத்திய அரசு வங்கி
பதவிகள்	மேலாளர் (பாதுகாப்பு), துணை மேலாளர் (பாதுகாப்பு)
காலியிடங்கள்	60
பணி வகை	நிரந்தரப் பணி
பணியிடம்	இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடக்கம்	04.11.2026
கடைசி தேதி	25.11.2026
விண்ணப்ப முறை	ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்	sbi.bank.in

பொங்கல் பண்டிகை: ரெயில் டிக்கெட் முன்பதிவு தொடக்கம்- தேதி வாரியாக விவரம்!

சென்னை, நவ.14–

பொங்கல் பண்டிகைக்கான ரெயில் டிக்கெட் முன்பதிவு வரும் 14–ந்தேதி தொடங்குகிறது. 3 நாட்கள் தொடர் விடுமுறையை



முன்னிட்டு பலரும் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்ல ஆயத்தமாவார்கள். எனவே, பொங்கலுக்கு முந்தைய தினம் ஜனவரி 13–ந்தேதி பயணம் செய்ய விரும்புவோர் வரும் இன்று முன்பதிவு செய்யலாம். ஜனவரி 14–ந்தேதி பயணம் செய்ய விரும்புவோர் நாளை –15–ந்தேதியிலும் டிக்கெட் முன்பதிவு செய்யலாம்.

ஜனவரி 15–ந்தேதி பொங்கல் அன்று பயணம் செய்ய விரும்புவோர் வரும் 16–ந்தேதியும் முன்பதிவு செய்யலாம். வழக்கமான ரெயில்களில் டிக்கெட் முன்பதிவு முடிந்த பிறகு பயணிகளின் தேவைக்கு ஏற்ப சிறப்பு ரெயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

இன்றைய கார்ட்டூன்



திருச்சியில் முதல்வரின் பிரம்மாண்ட ரோடு ஷோ?

திருச்சி, நவ. 14–

திருச்சி கிழக்கு தொகுதியில் இடைத்தேர்தல் முன்னிட்டு முதலமைச்சர் விஜய் 20–ந்தேதி பிரம்மாண்ட ரோடு–ஷோ நடத்த திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் பொதுமக்களை சந்தித்து நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார். இந்த நிகழ்வு த.வெ.க. தொண்டர்களிடையே உற்சாகத்தையும் பொதுமக்களிடையே எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. சட்டமன்ற தேர்தலில் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு முதலமைச்சர் விஜய் வெற்றி பெற்றார். பின்னர் அவர் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்ததால், அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

திருச்சி கிழக்கு தொகுதியுடன் சேர்த்து பெருந்துறை, அம்பாசமுத்திரம், கரூர், விராலிமலை ஆகிய 5 தொகுதிகளும் காலியாக உள்ளன. இந்த 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிப்பை தேர்தல் ஆணையம் விரைவில் வெளியிட திட்டமிட்டுள்ளதால், தமிழக அரசியல் களம் மீண்டும் சூடுபிடித்துள்ளது.

இடைத்தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் முதலமைச்சர் விஜய் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். ஏற்கனவே பெருந்துறை, விராலிமலை தொகுதி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கியதோடு 'ரோடு ஷோ' நடத்தி மக்களை சந்தித்தார்.



தொடர்ச்சியாக வருகிற 20–ந்தேதி திருச்சியில் நடைபெறும் அரசு விழாவில் முதலமைச்சர் விஜய் பங்கேற்பதுடன் திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் பிரம்மாண்ட ரோடு ஷோ நடத்தி பொதுமக்களை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார். 20–ந்தேதி காலை 11 மணிக்கு சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சி விமானம் நிலையம் வரும் அவர், அங்கிருந்து கார் மூலம் திருச்சி அரசு மருத்துவமனை வரை ரோடு ஷோவாக செல்கிறார்.

பின்னர் திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ரூ. 110 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 600 படுக்கைகள் கொண்ட, 7 தளங்களுடன் கூடிய உயர் சிகிச்சை மைய கூடுதல் கட்டிடத்தை திறந்து வைக்கிறார். மேலும் பச்சிளம் குழந்தைகள் வார்டுக்கு செல்லும் முதலமைச்சர், மருத்துவமனையில் பிறந்த குழந்தை களுக்கு தாய் மாமன் தங்க மோதிரம் அணிவிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து திருச்சி கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட சுப்பிரமணியபுரம் பகுதி வழியாக ரோடு–ஷோ நடத்தியப்படி ரேஸ்கோர்ஸ் சாலைக்கு செல்கிறார். அங்கு தேர்வு செய்யப்படவுள்ள ஒரு இடத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. இதற்காக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகம், தந்தை பெரியார் அரசு கல்லூரி ,ஜமால் முகமது கல்லூரி, தமிழ்நாடு ஓட்டல் ஆகிய இடங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இதில் ஏதாவது ஒரு இடம் தேர்வு செய்யப்பட உள்ளது. இந்த நிகழ்வுகளுக்கு பின்னர் பிற்பகல் 1 மணி அளவில் திருச்சியில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் புறப்பட்டு செல்கிறார். திருச்சி கிழக்கு தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதலமைச்சர் விஜய் ரோடு ஷோ சென்று நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தருவது த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இடையே உற்சாகத்தையும் பொதுமக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே தமிழக நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த் நேற்று முன்தினம் திருச்சி வந்து கட்சி நிர்வாகிகள், அமைச்சர்களுடன், முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், ரோடு ஷோ முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். பாதுகாப்பு பணிகள் குறித்து போலீசார் சிறப்பு ஆலோசனைகள் நடத்தி வருகின்றனர்.

பொதுமக்களே நேரடியாக பத்திரப்பதிவு செய்யலாம்- தமிழக அரசு!

சென்னை, நவ. 14–

பொதுமக்களே தங்களது ஆவணங்களை இணையவழியில் தயாரித்து பதிவு செய்யும் வகையில் பதிவுத்துறை புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அதாவது பத்திரம் எழுதுவதற்காக பத்திர எழுத்தர்கள், இடைத்தரகர்களை நாட வேண்டிய நிலையை மாற்றும் வகையில், பொதுமக்களே தங்களது ஆவணங்களை இணையதளம் மூலம் தயாரித்து, பதிவுக்கு சமர்ப்பிக்கும் புதிய வசதியை பதிவுத்துறை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதற்காக பதிவுத்துறையின் https://tnreginet.gov.in இணையதளத்தில், ஆவணங்களை எளிய முறையில் உருவாக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் 'லாகின்' உருவாக்கி, ஆவணங்களை இணையவழியில் தயாரித்து பதிவுக்கு சமர்ப்பிக்கலாம்.

அதற்காக முதலில் இணையதளத்தில் உள்நுழைந்து, 'ஆவணப்பதிவு' என்பதை தேர்வு செய்ய வேண்டும். பின்னர் ஆவணத்தை உருவாக்கும் பகுதிக்கு செல்ல வேண்டும். தொடர்ந்து விற்பனை, செட்டில்மெண்ட், பாகப்பிரிவினை உள்ளிட்ட எந்த வகையான ஆவணத்தை



உருவாக்க வேண்டும் என்பதை தேர்வு செய்து, 'தொடரவும்' என்பதை கிளிக் வேண்டும். பின்னர் விற்பவர், வாங்குபவர், சாட்சிகள், சொத்து மற்றும் பிற தேவையான விவரங்களை பதிவு செய்து சமர்ப்பிக்க வேண்டும். இதை யடுத்து ஒரு 'டி.பி. எண்' வழங்கப்படும்.

அதன்பின்னர் உள்ளீடு செய்த விவரங்களை சரிபார்த்து, உருவாக்கப்பட்ட ஆவணத்தை 'எனது ஆவணங்கள்' பகுதியில் பார்க்கலாம். பின்னர் அதை 'பி.டி.எப்' வடிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஆவணத்துக்கான கட்டணத்தை இணையவழியில் செலுத்தலாம். இதன்பின்னர் காகிதமில்லா ஆவணப்பதிவு' முறையைத் தேர்வு செய்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


மூன்றாவது நிலையில் வழங்கப்பட்ட டி.பி. எண்ணை உள்ளீடு செய்து, தேவையான தகவல்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆன்லைனில் 'ஒ.டி.பி.' மூலம் 'இ–கையெழுத்து' இட வேண்டும். தொடர்ந்து தங்களுக்கு வசதியான நாள் மற்றும் நேரத்தைத் தேர்வு செய்து, பதிவு செய்வதற்கான முன்பதிவு டோக்கனை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆவணத்தை பதிவு செய்யும் நபர்கள் மற்றும் சாட்சிகள், முன்பதிவு செய்த நாள் மற்றும் நேரத்தில் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்துக்கு நேரில் செல்ல வேண்டும். அங்கு சார்பதிவாளர் அடையாளம் மற்றும் ஆதார் அங்கீகாரத்தை சரிபார்ப்பார். கைரேகை அல்லது விழித்திரை மூலம் இறுதி ஆதார் சரிபார்ப்பும் மேற்கொள்ளப்படும். அதன்பிறகு சார்பதிவாளர் ஆவணத்தில் இ–கையெழுத்து இட்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணம் சம்பந்தப்பட்ட நபரின் இணையதள உள்நுழைவுக்கு அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் இடைத்தரகர்களின் உதவியின்றி, தங்களது ஆவணங்களை தாங்களே உருவாக்கி பதிவு செய்து கொள்ளலாம் என்று பதிவுத்துறை தெரிவித்துள்ளது.



தொடர்ந்து குறைந்து வரும் தங்கம் விலை!

சென்னை, நவ. 14–

தங்கத்தின் விலை கடந்த ஐந்து நாள்களில் பவுனுக்கு ரூ.5,120 குறைந்துள்ளது. வெள்ளி விலையில் இன்று மாற்றமின்றி கிராம் ரூ.195–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.1.95 லட்சத்துக்கும் விற்பனையாகிறது. இந்த நவம்பர் மாதத்தில் அதிகபட்சமாக தங்கம் விலை கடந்த நவ. 5 ஆம் தேதி ஒரு பவுன் ரூ. 1,16,816 –க்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



விலைவாசி உயர்வில் முதலிடம் பிடித்த தமிழகம்!


புதுடெல்லி, நவ,. 14–

இந்தியாவில் விலைவாசி உயர்வில் 7.29 சதவீதத்துடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக தெலுங்கானா – 7.26 சதவீதத்துடன் 2–வது இடத்தில் உள்ளது.

இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் கடந்த அக்டோபர் மாதத்துக்கான நுகர்வோர் விலை பற்றிய அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது.

இதில் நாட்டின் ஒட்டுமொத்த சில்லறைப் பணவீக்கம் (விலைவாசி) கடந்த அக்டோபர் மாதம் 6.09 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது செப்டம்பரில் 5.54 சதவீதமாக இருந்தது. உணவுப் பொருட்களுக்கான விலைவாசி 7.74 சதவீதத்தில் இருந்து 8.94 சதவீதமாக அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. கடந்த மாதத்தில் வெங்காயம், பூண்டு, இஞ்சி, எலுமிச்சை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கணிசமாக உயர்ந்துள்ளன. அதேநேரத்தில் உருளைக்கிழங்கு, காலிபிளவர், தேங்காய் உள்ளிட்ட சில பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. கடந்த மாதத்தில் விலைவாசி உயர்ந்த பொருட்களின் பட்டியலில் வெங்காயம் முதலிடத்தில் உள்ளது. இதன் விலை 116.22 சதவீதமாக உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் இது 108.13 சதவீதமாக இருந்தது. அதாவது, கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்துடன் ஒப்பிடும்போது வெங்காயத்தின் விலை 2 மடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

அதற்கடுத்தபடியாக 2–வது இடத்தில் பூண்டு உள்ளது. இது செப்டம்பரில் 54.62 சதவீதமாக இருந்த நிலையில், அக்டோபரில் 60.74 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்திய சமையலில் அன்றாடம் பயன்படுத்தப்படும் இந்த 2 பொருட்களின் விலை உயர்வு குடும்பங்களின் சமையல்



செலவினங்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேபோல் வெள்ளி நகைகள் 52.39 சதவீதமாக இருந்து 3–வது இடத்தில் உள்ளது. அதுவே கடந்த செப்டம்பரில் இதன் விலை 87.82 சதவீதமாக இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது அக்டோபரில் உயர்வு விகிதம் குறைந்துள்ளது.

4–வது இடத்தில் இஞ்சி 48.32 சதவீதத்துடனும், எலுமிச்சை 47.30 சதவீதத்துடன் 5–வது இடத்திலும் இருந்துள்ளன. இஞ்சியின் விலை செப்டம்பரில் 62.85 சதவீதமாகவும், எலுமிச்சை 36.41 சதவீதமாகவும் இருந்தன. இதன்படி, இஞ்சியின் விலை உயர்வு வேகம் குறைந்துள்ள நிலையில், எலுமிச்சையின் விலை உயர்வு வேகம் அதிகரித்துள்ளது.

மறுபுறம், அக்டோபரில் குறைந்த விலையை பதிவு செய்த பொருட்களின் பட்டியலில் உருளைக்கிழங்கு முதலிடத்தில் உள்ளது. இதன் விலை மைனஸ் 14.24 சதவீதமாக உள்ளது. செப்டம்பரில் இது மைனஸ் 11.52 சதவீதமாக இருந்தது. அதாவது, கடந்த ஆண்டு அக்டோபருடன் ஒப்பிடும்போது உருளைக்கிழங்கின் விலை 14.24 சதவீதம் குறைந்துள்ளது. காலிபிளவர் மைனஸ் 10.57 சதவீதத்துடன் 2–வது இடத்திலும், தேங்காய் மைனஸ் 5.60 சதவீதத்துடன் 3–வது இடத்திலும் இருந்தன. கத்தரிக்காய் மைனஸ் 3.34 சதவீதத்தையும், முட்டைக்கோஸ் மைனஸ் 1.92 சதவீதத்தையும் பதிவு செய்துள்ளன.

இந்தியாவில் விலைவாசி உயர்வில் 7.29 சதவீதத்துடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக தெலுங்கானா – 7.26 சதவீதத்துடன் 2–வது இடத்திலும், ஆந்திரா – 7.25 சதவீதத்துடன் 3–வது இடத்திலும், அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த இடங்களில் மத்தியபிரதேசம் – 7.19 சதவீதத்துடனும், ஒடிசா – 7.17 சதவீதத்துடனும் உள்ளன.

அதேபோல் கடந்த மாதம் நாட்டின் கிராமப்புறங்களின் ஒட்டுமொத்த சில்லறை விலை 6.63 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 5.41 சதவீதமாகவும் இருந்தது. உணவுப் பொருட்களுக்கான விலைவாசி கிராமப்புறங்களில் 9.09 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 8.68 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு பொதுமக்களின் குடும்பச் செலவினங்களை அதிகரிக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக, வெங்காயம், பூண்டு போன்ற பொருட்களின் விலை உயர்வு சாமானிய மக்களை அதிகம் பாதிக்கக்கூடும். அதேநேரத்தில் சில காய்கறிகளின் விலை சரிவு ஓரளவுக்கு நுகர்வோருக்கு ஆறுதல் அளிக்கிறது. இருப்பினும், உணவுப் பணவீக்கம் தொடர்ந்து அதிகரிப்பது குடும்பங்களின் வாங்கும் திறனுக்கும் நாட்டின் பொருளாதார நிலைக்கும் முக்கியமான சவாலாக உள்ளது என்பதை அறியலாம்.

அமெரிக்காவில் மொத்தமாக முடங்கிய விமான சேவை: பயணிகள் தவிப்பு!




அமெரிக்கா, நவ. 14–

அமெரிக்காவில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையங்களில் ஏற்பட்ட தகவல் தொடர்பு கோளாறு காரணமாக விமான சேவை முடங்கியுள்ளது. அமெரிக்காவில் இருந்து புறப்படும் அனைத்து விமானங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பல ஆயிரக்கணக்கான பயணிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையங்களை இணைக்கும் தகவல் தொடர்பு அமைப்பில் ஏற்பட்ட பாதிப்பே இதற்கு காரணம் எனக்கூறப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்க போக்குவரத்துத்துறை மந்திரி சீன் டபி கூறுகையில், 'அனைத்து விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையங்களிலும் தகவல் தொடர்பு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனை சரிசெய்ய தொழில்நுட்ப வல்லுநர்கள் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர்' என்றார்.

ஏற்கனவே வானில் பறந்து கொண்டிருந்த விமானங்கள் அதாவது அமெரிக்காவுக்கு வந்து கொண்டிருந்த விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கப்பட்டன. ஆனால், அமெரிக்காவில் இருந்து விமானங்கள் புறப்பட தடை விதிக்கப்பட்டது. சர்வதேச விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடு குறித்து தனித்தனியாக முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த திடீர் நடவடிக்கையால் சுமார் 7 ஆயிரம் விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டதாக விமானப் போக்குவரத்து கண்காணிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2008– ஆம் ஆண்டு செப்டம்பர் 11–ம் தேதி அமெரிக்காவில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, நாடு முழுவதும் விமானங்கள் புறப்பட தடை விதிக்கப்பட்டது . அதன்பிறகு 2023–ம் ஆண்டு ஜனவரியில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமான சேவை நிறுத்தப்பட்டது. தற்போது மீண்டும் நாடு தழுவிய அளவில் விமானங்கள் புறப்பட தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் இருந்து கிளம்ப வேண்டிய விமானங்கள் மொத்தமாக நிறுத்தப்பட்டதால் சர்வதேச அளவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



சினிமா துளிகள்..!

தனுஷின் ஓம் படத்தின் டிரைலர் வெளியீடு..! டிரெண்டிங்கில் முதலிடம்!



நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள ஓம் திரைப்படத்தின் டிரைலர் நள்ளிரவில் வெளியானது. யூடியூப் டிரெண்டிங்கில் முதலிடம் பிடித்துள்ளது.

நடிகர் தனுஷ் நாயகனாக நடித்துள்ள ஓம் திரைப்படத்தை அமரன் பட இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கியுள்ளார். இப்படத்தை தனுஷின் வுன்டர்பார் ஃபிலிம்ஸ் மற்றும் ஆர்டேக் ஸ்டூடியோஸ் இணைந்து தயாரிக்கின்றன.

இந்தப் படத்தில் மம்மூட்டி, சாய் பல்லவி, ஸ்ரீலீலா, நஸ்ரூதின் ஷா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சாய் அபயங்கர் இசையமைத்துள்ளதால், படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.

சாய் அபயங்கர் இசையில் வெளியான 'அலாக்கா லோவா', 'வீழா வீரா' மற்றும் ஃபா... ஃபா.. மூன்று பாடல்களும் மிகப்பெரிய வரவேற்பை பெற்றன.

ஓம் திரைப்படம் நவ. 20 அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில் இந்தப் படத்தின் டிரெய்லர் வெள்ளிக்கிழமை (நவ. 13) மாலை 7 மணிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டு பின்னர் நள்ளிரவில் வெளியானது.

யூடியூப் டிரெண்டிங்கில் இந்த டிரைலர் முதலிடம் பிடித்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டுள்ளது.

இந்தப் படத்தின் தலைப்பு 'ஓம் சேப்டர் 1: உதிரம் தி ப்ளட் வுட்' (OM CHAPTER: 1 UDHIRAM THE BLOOD WOOD) என்று முதலில் வெளியான நிலையில், தணிக்கைக் குழு பிரச்சினைகளால், 'ஓம்: ஆபரேஷன் மோல்' (O.M OPERATION MOLE) என்று தலைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020